[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில்* உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிக்கைகள் குறித்து

(திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம், திரு. கு. ரமணி, திரு. பொ. உத்திராபதி ஆகியோர் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடத்திலே என்ன பேசப் போகிறீர்கள் என்று கூறி முன் அனுமதி வாங்கவில்லை. ஆகவே அனுமதிக்க முடியாது.

திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம் : அனுமதி வாங்கிவிட்டோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதி வாங்கவில்லை. கேட்டீர்கள், ஆனால் அவை தேவையில்லை என்று சொன்னதாகத் துணைத் தலைவர் சொன்னார். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்திலே அறையிலே கேட்டபோது, அலுவல் ஆய்வுக் குழு கூடுகிறது. அங்கேதான் பேச வேண்டும் என்று சொல்லியாகி விட்டது. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்பு தீர்மானங்களைப் பற்றி அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்) இவ்வளவு பேர்கள் எழுந்து நிற்கலாமா? உட்காருங்கள். (குறுக்கீடுகள்). ஒவ்வொருவருக்கும் கொடுக்க வேண்டும் என்று கணக்கு இல்லை. கட்சித் தலைவர்களுக்கே வேண்டாம் என்று சொன்னேன். ஏதாவது அவையில் எழுப்ப வேண்டுமென்றால் மாண்புமிகு அவைமுன்னவர் அவர்களிடத்திலே பேசி விட்டு வந்து என்னிடம் சொல்லுங்கள். அடுத்து அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த கவன ஈர்ப்பு ....(குறுக்கீடுகள்).

(முற்பகல் 11–30)

திரு. எஸ். சிவராமன் : கேளுங்கள் என்று சொன்னவுடன் உட்கார்ந்துவிட்டோம். இப்போது அனுமதிக்க மறுக்கிறீர்களே ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேட்டதற்கு உங்களிடத்தில் சொன்னேன் ; அவை முன்னவரிடத்தில் பேசிவிட்டுப் பேசுங்கள் என்றேன். இங்கே அவையிலே வந்து பேசாதீர்கள்.

1987 நவம்பர் 12] [பேரவைத் தலைவர்]

(குறுக்கீடுகள்) அவை முன்னவர் அவர்கள் அறைக்குச் செல்லும் போது அங்கே போய்ப் பார்த்து பேசிவிட்டு வாருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆறுமுகம் தயவுசெய்து அமருங்கள். முதலில் சொன்னீர்கள் கேட்டேன் என்று; துணைத் தலைவர் சொல்கிறார் இல்லையென்று. உட்காருங்கள். திருவாளர்கள் மணிமாறன், உத்திராபதி ஆகியோரில் ஒருவர் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. வி. தங்கவேலு: தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கு நான் என்ன சொல்வது என்று தெரியவில்லை. திரு. தங்கவேலு, உட்காருங்கள். இது முறையல்ல. உட்காருங்கள். (குறுக்கீடுகள்).

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: எங்களுக்குப் பாதுகாப்பு தேவை................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய அறைக்கு வாருங்கள். பாதுகாப்பு தருகிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: அவை முன்னவர் இருக்கிறார். எங்களுடைய உரிமை பாதுகாக்கப்படவில்லை.............. (குறுக்கீடுகள்).

திரு. பொ. உத்திராபதி: தலைவர் அவர்களே.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. உத்திராபதி உட்காருங்கள். அறைக்கு வந்து சொல்லுங்கள். முக்கியமானதாக இருந்தால் எந்த வழியிலாவது அனுமதிக்கிறேன். போதுமா? இதற்கு மேல் நான் என்ன செய்வது? (குறுக்கீடு) அறைக்கு வாருங்கள் சொல்கிறேன். உட்காருங்கள்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: இங்கே வந்து சொல்லியாகி விட்டது. 2 நிமிடம் அனுமதியுங்கள்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆறுமுகம் உட்காருங்கள். இந்த அவையில் எழுப்பப்பட வேண்டிய விஷயம் என்றால் 2 நிமிடம் என்ன, 5 நிமிடம் அனுமதிக்கிறேன்.

திரு. கே. சுப்பராயன்: டெபுடி ஸ்பீக்கர் அனுமதிக்கிறேன் என்று சொன்ன பிறகு முடியாது என்று எப்படி சொல்கிறீர்கள்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய அறைக்கு வாருங்கள், பேசிவிட்டு அதற்கு தீர்வைச் சொல்கிறேன், உட்காருங்கள்.

திரு. கே. சுப்பராயன் : டெபுடி ஸ்பீக்கர் அனுமதிக்கிறேன் என்று சொல்லிவிட்டு இப்போது எப்படி அதை மீறலாம் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : தலைவர் அவர்களே, ஒரு நிமிடம் அனுமதியுங்கள். சொன்னார்களா, சொல்லவில்லையா என்பது மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. திரு. சுப்பராயன் அவர்கள் பேசுவது மட்டுமே நியாயம் என்று சொல்ல முடியாது. அலுவல் ஆய்வுக் குழு நாளைக்கு கூடுகிறது, அப்போது பேசுங்கள், அவை முன்னவரிடம் கலந்து பேச வேண்டுமென்றுதான் சொன்னேனே தவிர; அனுமதிக்கிறோம் என்று சொல்லவே இல்லை. ஆக உறுப்பினர்கள் சொல்வதுதான் உண்மை, பேரவைத் தலைவர், துணைத் தலைவர் ஆகியோர் சொல்வது * * என்று வார்த்தையை உபயோகப்படுத்துவதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும். மாண்புமிகு திரு சுப்பராயன் சொன்னால் உண்மை, மற்றவர்கள் சொன்னால் * * என்றால் என்ன செய்வது? உண்மைக்கு மொத்த குத்தகையையே அவர்கள் எடுத்திருக்கிறார்களா என்னவோ தெரியவில்லை. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆறுமுகம் அவர்கள் உட்கார வேண்டும். இதற்கு மேலும் கேட்பது, நிற்பது சரியல்ல.

திரு. எ. எஸ். எ. ஆறுமுகம் : அவை முன்னவர் அவர்கள் இருக்கிறார்கள். முதலில் அலுவல் ஆய்வுக் குழு கூடுகிறது என்று சொன்னார்கள். பின்னால் ஒப்புக் கொண்டார்கள். இப்போது அனுமதிக்கவில்லை என்றால், அது என்ன நியாயம்? (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆறுமுகம், தயவு செய்து உட்காருங்கள். உங்களை விட வேகமாகப் பேசக் கூடியவர்கள் தான் நாங்கள். நாங்களே அமைதியாக இருக்கிறோம். வேகமாகப் பேசாதீர்கள், உட்காருங்கள். அறைக்கு வாருங்கள் பேசிக் கொள்ளலாம். ஒரு முக்கியமான பிரச்சினையாக இருந்தால், தேவைப்படுமானால் அனுமதிக்கிறேன் என்று சொல்லி இருக்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காரச் சொன்னால் உட்கார மாட்டீர்கள். அவ்வளவு தானே?

நீங்கள் உட்காருங்கள், நான் கேட்கிறேன் என்று சொல்கிறேன் (குறுக்கீடு). என்னுடைய அறைக்கு வாருங்கள், பேசிக் கொள்ளலாம் என்று சொல்கிறேன், இதற்கு மேல் என்ன?

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.